# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

**INTEGRATED INVESTIGATION FORM-I**

C 8051858

1. District / மாவட்டம் : கிருஷ்ணகிரி    PS / காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு    Year / ஆண்டு : 2021    FIR No. / மு.த.அ. எண் : E/AC/2021    Date / நாள் : 25.07.2021

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் - 1988,    Sections பிரிவுகள்: 7 (a)

   (ii) Act சட்டம்: 2018-ல் திருத்தியமைக்கப்பட்டது.    Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை 23.07.2021.

   Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை 12.00 மணி முதல் 16.00 மணி.

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்    Time : நேரம் 25.07.2021 / 19.00 மணி.

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்    Time : நேரம்

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக    வாய் மொழியாக.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் சுமார் 100 கி.மீ தென்மேற்கு.

   Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி கிராம நிர்வாக அலுவலகம், அஞ்செட்டி மேற்கு, அஞ்செட்டி வட்டம்,

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் கிருஷ்ணகிரி மாவட்டம்.

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. பாக்கியராஜ்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் கிருஷ்ணன்

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 35 yrs.    (d) Nationality : நாட்டினம் இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

   Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் விவசாயம்    (g) Address : முகவரி க. எண். 4/133-1, பாலதொட்டனப்பள்ளி தொட்டி கிராமம், தக்கட்டி அஞ்செட்டி, அஞ்செட்டி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   திரு. கார்த்திக், கிராம நிர்வாக அலுவலர், அஞ்செட்டி மேற்கு, அஞ்செட்டி வட்டம், கிருஷ்ணகிரி மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   புகார்தாரரால் தாமதம்.

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21 3 16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[illegible signature] 25.7.2021

D.M. [signature] 25/07/2021.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.07.2021 / 22.30 hrs.

Name: பெயர் D.M. [illegible],
Rank: நிலை ...................... No. எண் ..........
காவல் ஆய்வாளர்,
[illegible]

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 5/AC/2021 சட்டப்பிரிவு7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.

---

25.07.2021ம் தேதி மாலை 19.00 மணிக்கு கிருஷ்ணகிரி ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான் அலுவலில் இருந்தபோது, கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி வட்டம், தக்கட்டி அஞ்சல், பாண்டுரங்கன் தொட்டி கிராமம், க.எண் 4/133-1 ல் வசித்துவரும் திரு.K.பாக்கியராஜ், த/பெ கிருஷ்ணன் என்பவர் நிலையம் ஆஜராகி வாய்மொழியாக கொடுத்த புகாரின் விவரம்: திரு.K.பாக்கியராஜ், வயது 35, த/பெ கிருஷ்ணன், க.எண்-4/133-1, பாண்டுரங்கன் தொட்டி கிராமம், தக்கட்டி அஞ்சல், அஞ்செட்டி தாலுக்கா, கிருஷ்ணகிரி மாவட்டம் என்பவரது வாக்குமூலம்: நான் கிருஷ்ணகிரி மாவட்டம், அஞ்செட்டி தாலுக்கா, தக்கட்டி அஞ்சல், பாண்டுரங்கன் தொட்டி கிராமத்தில் குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் விவசாய தொழில் செய்துவருகிறேன். நான் 5 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். எனக்கு தமிழ் படிக்க தெரியும், ஆனால் எழுத தெரியாது. தமிழில் கையெழுத்து மட்டும் போடுவேன். எனக்கு திருமணமாகி இரண்டு மகன்கள் இருக்கிறார்கள். நான் எனது அப்பா, அம்மா மற்றும் எனது தம்பி ஆகியோருடன் கூட்டு குடும்பமாக குடியிருந்துவருகிறோம். பாண்டுரங்கன் தொட்டி கிராமத்தில் குடியிருக்கும் எனது பெரியப்பா திரு.கோவிந்தன் அவர்கள், அவருக்கு பாத்தியப்பட்ட அஞ்செட்டி கிராம சர்வே எண் 876/11 ல் உள்ள 0.89 சென்ட் விவசாய நிலத்தையும், அஞ்செட்டி கிராம சர்வே எண் 876/6 ல் உள்ள 0.64 சென்ட் விவசாய நிலத்தையும், அவருடைய உடன்பிறந்த தம்பியான, என்னுடைய அப்பா திரு.கிருஷ்ணன் அவர்களுக்கு கடந்த 06.09.2018 ஆம் தேதியன்று தேன்கனிக்கோட்டை சர்பதிவாளர் அலுவலகம் மூலம் தான செட்டில்மெண்ட்டு கொடுத்தார். அந்த நிலத்தை எனது அப்பா திரு.கிருஷ்ணன் பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்காக 23.07.2021 ஆம் தேதியன்று காலை அஞ்செட்டியில் உள்ள ஒரு கம்பியூட்டர் கடையில், ஆன்லைனில் விண்ணப்பம் செய்தேன். அதன்பிறகு, அஞ்செட்டி (மேற்கு) VAO அலுவலகத்திற்கு சென்று அங்கிருந்த அஞ்செட்டி (மேற்கு) VAO திரு.கார்த்திக் அவர்களை பகல் 12.00 மணிக்கு சந்தித்து எனது அப்பா பெயரில் பட்டா மாறுதல் செய்வதற்காக ஆன்லைனில் பதிவேற்றம் செய்யப்பட்ட விண்ணப்பத்தின் ஜெராக்ஸ் ஒன்றை அவரிடம் கொடுத்தேன். அவர்

அதை வாங்கி பார்த்துவிட்டு, இரண்டு சர்வே எண்ணில் பெயர் மாற்றம் செய்ய வேண்டியுள்ளதாகவும், ஒரு சர்வே எண்ணிற்கு ரூ.4000/- வீதம் இரண்டு சர்வே எண்ணிற்கு ரூ.8000/- லஞ்சமாக கொடுத்தால் பட்டா மாறுதல் செய்ய ஏற்பாடு செய்வதாக சொன்னார். அதற்கு நான், அவ்வளவு பணம் என்னால் தரமுடியாது என்று VAO அவர்களிடம் சொன்னேன். பிறகு அவர் உனக்காக ரூ.2000/- குறைத்துக்கொள்கிறேன் என்றும், ரூ.6,000/- எடுத்து கொண்டு அஞ்செட்டி to ஒகேனக்கல் ரோட்டில் உள்ள சேலத்து மாரியம்மன் கோவில் தெருவில் தான் தங்கியிருக்கும் ரூமிற்கு வருமாறு VAO சொன்னார். அதன்பிறகு அன்று மாலை சுமார் 04.00 மணிக்கு நானும், எனது நண்பர் திரு.மூர்த்தியும் எனது டூ வீலர் வண்டியை எடுத்துக்கொண்டு அஞ்செட்டி to ஒகேனக்கல் ரோட்டில், அவர் தங்கிருந்த ரூமிற்கு சென்றோம். அங்கிருந்த VAO கார்த்திக் அவர்களிடம் எங்களுடைய பட்டா பற்றி கேட்டேன். அதற்கு அவர், தான் காலையில் சொன்னபடி ரூ.6,000/- கொடு என்று சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் என்னால் கொடுக்கமுடியாது என்று சொன்னேன். அதற்கு VAO கார்த்திக் அவர்கள் ரூ.5,000/- கொடு என்று சொன்னார். நான் விவசாய கூலி வேலை செய்துவருவதாகவும், என்னால் அவ்வளவு பணம் கொடுக்கமுடியாது என்றும் VAO விடம் சொன்னேன். அதற்கு VAO அவர்கள் கடைசியாக ரூ.4,000/- கொடுத்தால்தான் பட்டா மாறுதல் செய்ய ஏற்பாடு செய்யமுடியும் என்றும், அந்த பணத்தை தான் DT வரை கொடுத்தால்தான் வேலை நடக்கும் என்றும், அதனால் பணத்துடன் எப்போது வேண்டுமானாலும் வந்து என்னைபார் என்று கூறிவிட்டார். VAO கார்த்திக் அவர்களுக்கு ரூ.4,000/- லஞ்சமாக கொடுத்து பட்டா மாறுதல் பெற எனக்கு விருப்பமில்லை. எனவே, பட்டா மாறுதல் செய்வதற்கு என்னிடம் ரூ.4,000/- லஞ்சமாகக்கேட்ட அஞ்செட்டி (மேற்கு) VAO கார்த்திக் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேற்படி வாக்குமூலத்தை படித்துப்பார்த்தேன், நான் சொன்னபடி சரியாக உள்ளது. Sd\-xxxxx. திரு.K.பாக்கியராஜ், 25.07.2021 மேற்படி வாய்மொழி புகாரினை எனது மடி கணினியில் தட்டச்சு செய்தும், புகார்தாரரிடம் கையொப்பம் பெற்று, அதன் தன்மைப்படி இன்று 25.07.2021-ம் தேதி மாலை 21.30 மணிக்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 5/AC/2021 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended in 2018 ன்படி வழக்கு பதிவு செய்து, முதல் தகவலறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை கிருஷ்ணகிரி மாவட்ட சிறப்பு நீதிபதி மற்றும் தலைமை

குற்றவியல் நடுவர் அவர்களுக்கு அனுப்பிவைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

D.M7. [signature]
25/07/2021.
Inspector of Police,
VAC, Krishnagiri.